புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்க அகநானூற்றுக் குறிஞ்சித் திணைப் பாடல்களில் விலங்குககள் மூலம் வலியுறுத்தப்படும் வாழ்வியல் நெறிகள்

இரா. செல்லக்கண்ணு
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம்,
நீலக்குடி வளாகம், திருவாரூர் – 610 001. தமிழ்நாடு.

*ஆய்வுச் சுருக்கம்:*

*இக்கட்டுரை பழந்தமிழ்ப் புலவர்கள் தாங்கள் புனைந்த அகப்பாடல்களில் அஃறிணை உயிர்களாகிய விலங்குகளின் செயல்பாடுகளை விவரிப்பதன் மூலம் வாழ்க்கையை வெளிப்படுத்தும் முயற்சிகளை எவ்வாறு செய்தார்கள் என்பது ஆராயப்படுகின்றது. மேலும் இங்கு தலைவி இற்செறிக்கப்பட்ட நிலை யானை, புலி, பன்றி, குரங்கு ஆகிய விலங்குகளை அடிப்படையாகக் கொண்டு விவரிப்பதன் மூலம் தலைவியின் நிலை தலைவனுக்கு தெளிவுபடுத்தப்படுகின்றது.*

*திறவுச்சொறக்ள்: அகநானூறு, விலங்குககள், வாழ்வியல் நெறிகள்*

*முன்னுரை:*

*இலக்கியங்கள் அவ்வக்காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் கருவிகளாகும். சங்க கால மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாக சங்க இலக்கியம் திகழ்கின்றது. சங்க கால மக்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர். திணை அடிப்படையில் வாழ்ந்த அம்மக்கள் அந்நிலத்தில் வாழும் உயிரினங்களைச் சார்ந்தே வாழ்ந்துள்ளனர். அவற்றில் அஃறிணை உயிரினமாகிய விலங்கும் ஒன்றாகும். அவ்விலங்கினங்கள் சங்கப் பாக்களில் வாழ்வியல் நெறிகளை மாந்தர்களுக்குக் கற்பிக்கின்றன. அந்த வகையில் அகநானூற்றுக் குறிஞ்சித் திணையில் விலங்குகள் மூலம் வலியுறுத்தப்படும் வாழ்வியல் நெறிகளை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

*உள்ளுறையுவமங்கள்:*

*உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு எனக்*
*கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே*

*(தொல். பொருள். 238)*

*என்னும் தொல்காப்பிய நூற்பா கவிதையின் உள்ளுறையாகக் கூறப்பெறும் பொருளை உடனுறை, உவமம், சுட்டு நகை, சிறப்பு என ஐவகைப்படுத்துகிறது. உடனுறை என்றாலும் இறைச்சி என்றாலும் ஒன்றே ஆகும்.*

*உள்ளுறையுவமம் என்பது தமிழ் இலக்கியத்திற்கே உரிய தனிநெறி. அகப்பொருளாகிய ஐந்திணைக் கண்ணே தான் ஆளுதற்குரியது. கருப்பொருள் என்னும் இயற்கைச் சூழலிலிருந்து புனையப்படுவது. வெளிப்பார்வைக்குச் செடி, கொடி, மரம், பறவை, விலங்குகளின் செயல்களைப் புனைவது போற் காணப்படும். இவ்வாறு இயற்கையைப் புனைவு செய்வது*

*அகப்புலவர்களின் நோக்கமன்று. உள்ளொன்று வைத்து அதற்கிணையான புறமொன்று கூறுவர். கூறினும் அகத்தொடர்பான உட்கருத்து மெய்யுள் உயிர்போல விளங்கிக் கிடக்கும்.*

*கறங்குவெள் அருவி பிறங்குமலைக் கவாஅன்,*
*தேம்கமழ் இணர வேங்கை சூடி,*
*தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ,*
*மறுகில் தூங்கும் சிறுகுடிப் பாக்கத்து,*
*இயல்முருகு ஒப்பினை, வயநாய் பிற்பட,*
*பகல்வரின், கவ்வை அஞ்சுதும்; இகல்கொள,*
*இரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய்ப்*
*பெருங்கை யானைக் கோள்பிழைத்து, இரீஇய*
*அடுபுலி வழங்கும் ஆர்இருள் நடுநாள்*
*தனியை வருதல் அதனினும் அஞ்சுதும்*
*என்ஆ குவள்கொல் தானே? பல்நாள்*
*புணர்குறி செய்த புலர்குரல் ஏனல்*
*கிளிகடி பாடலும் ஒழிந்தனள்;*
*அளியள் தான்நின் அளிஅலது இலளே !* *(அகநானூறு. 118)*

*பகற்குறி, இரவுக்குறியை மறுத்தும், தலைவி இற்செறிக்கப்பட்டமையை அறிவுறுத்தியும் தலைவியை மணந்து கொள்ளுமாறு தலைவனிடம் தோழி கூறும் பாட்டு இது.*

*இயற்கைப் புனைவு:*

*கருநிறப் பிடியோடும் கன்றோடும் கூடிய அகன்ற வாயினையும் பெரிய கையினையும் உடைய களிற்றினைத் தன் இரையாகக் கொள்ளுதலினின்றும் தப்ப விடுத்து, அதனால் அவற்றைப் பகையுணர்ச்சியுடன் ஓரிடத்தே கூட்டமாக மறைந்திருக்கும்படி செய்த, கொல்லும் புலி உலவித் திரிகின்ற, வருவதற்கரிய இருள் செறிந்த நள்ளிரவில், நீ தனியனாகி வருதலை அவ் அலரைக் காட்டிலும் மிகுதியாக அஞ்சுகின்றோம்.*

*இத்தகைய இயற்கை நலம் மிக்கது தலைவனின் இரவுக்குறி வழி. இரவுக் குறிக்காக மேற்கொள்ளப்பபெறும் வழியில் பலவகை இயற்கைகள் உண்டாதலின், புனைவு பலவாறு செய்யலாம். தோழி இனி இயற்கைக் காட்டப் புனைந்தாளா? உள்ளக்குறிப்பைக் காட்ட அதற்கேற்றபடி ஓர் இயற்கையைப் புனைந்து கொண்டாளா? அகப் பாடல்களில் இயற்கைப் புனைவிற்கு உள்ளுறைப் பொருள் வேண்டும். இதுவே இயற்கைப் புனைவில் உள்ளுறைப் பொருளின் ஆழம் பொதிந்து இருப்பதைக் குறிப்பால் உணரலாம். (தமிழ்க்காதல்: 169-170)*

*விலங்குகள் மூலம் வலியுறுத்தப்படும் வாழ்வியல் நெறிகள் :*

*புலி:*

*உள்ளுறை தரும் அகப்பாடல்களே மிகப் பல. அங்ஙனம் தாராத இயற்கைப் பாடல்கள் அகத்துறைக்கண் சிறப்பில, வழுவமைதிப் படுவன.*

*அடுபுலியானது யானையைக் கொல்லும் முயற்சியில் பிழைத்து, அதனை எங்கும் இயங்க விடாது ஓரிடத்தே இருக்கும்படி செய்தது போன்று, நீயும் அறிவாற்றல் உடையவனாயினும் தலைவியை மணந்து கொள்ளும் முறையில் பிழைத்தமையால் அவளை யாண்டும் செல்லவிடாது இற்செறிப்புக்கு உள்ளாக்கினாய் என்பது இப்பாடலின்கண் அமைந்துள்ள உள்ளுறை பொருள். தலைவன் தலைவியை மணந்து கொள்ளாமல் களவொழுக்கத்திலேயே நாட்டம் உடையவனாய் இருக்கிறான். தலைவனின் இச்செயலால் தலைவி இச்செறிக்கப்பட்டது மட்டுமல்லாமல், ஊர் மக்களின் அலராலும் மிகுந்த துன்பத்தை அடைகின்றாள்.*

*களவு வாழ்க்கையை விட கற்பு வாழ்க்கையே மேன்மை பொருந்தியது என்ற வாழ்வியல் நெறிக்கு ஏற்ப தலைவியை தலைவன் விரைவில் மணம் செய்து கொள்ள வேண்டும் எனப் புலவர் யானை, புலி ஆகிய விலங்குகளின் துணை கொண்டு பாடலைப் பாடியுள்ளார்.*

*பன்றி:*

*நகைநீ கேளாய் - தோழி! - அல்கல்;*
*வயநாய் எறிந்து, வன்பறழ் தழீஇ,*

இளையர் எய்துதல் மடக்கி, கிளையொடு
நால்முலைப் பிணவல் சொலிய, கான் ஒழிந்து,
அரும்புழை முடுக்கர் ஆள்குறித்து நின்ற

தறுகட் பன்றி நோக்கி, கானவன்
குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி
மடை செலல் முன்பின் தன் படை செலச் செல்லாது,
'அரு வழி விலக்கும் எம் பெருவிறல் போன்ம்' என,
எய்யாது பெயரும் குன்ற நாடன்

செறிஅரில் துடக்கலின், பரீஇப்புரி அவிழ்ந்து,
ஏந்துகுவவு மொய்ம்பின் பூச்சோர் மாலை,
ஏற்றுஇமிற் கயிற்றின், எழில்வந்து துயல்வர,
இல்வந்து நின்றோற் கண்டனள் அன்னை;
வல்லே என்முகம் நோக்கி,
'நல்லை மன்!' என நகூஉப் பெயர்ந்தோளே.

(அகநானூறு. 248)

இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய், தலைமகன் கேட்ப, தோழி கூறும்பாட்டு இது.

அஞ்சாமையையுடைய ஆண் பன்றியானது வலிமை மிக்க வேட்டை நாயைச் சினந்து எதிர்த்து விரட்டியது. தன்னை நோக்கி வேடர்கள் நெருங்கி வருதலைத் தடுத்து நிறுத்தியது. தொங்கும் முலையினையுடைய பெண்பன்றி வலிய குட்டிகளை அணைத்துக் கொண்டு தன் இனத்துடன் தப்பிப் பிழைத்துப் போகும்படிச் செய்தது. பின்னர், காட்டினின்றும் வெளிவந்து நுழைதற்கரிய வாயினையுடைய ஒரு முடுக்கின்கண் வேட்டையாடும் ஆட்களை எதிர்பார்த்து நின்றது. வீரஞ்செறிந்த அப்பன்றியினை வேடன் ஒருவன் அருகிற் சென்று கண்டான். ‘பகைத்து வருவாரைத் தடுத்து நிறுத்தச் சென்ற தன் படைவீரர்கள் முதுகிட்டு ஓடத் தான் மட்டும் அவ்விடம் விட்டு நீங்காது பகைவர் வரும் வழியினைத் தனித்து நின்று தடுத்து நிறுத்தும் மிக்க வலிமையையுடைய எம் தலைவனைப் போலும் தறுகண்மையை உடையது இது’ என வியந்து தன் வில்லிற் கோத்த கூரிய முனையையுடைய அம்பினை அப்பன்றியுன் மேல் எய்யாது மீண்டான். அத்தகைய மலைபொருந்திய நாட்டினையுடையவன் நம் தலைவன்.

அஃறிணைக் குடும்பத்தில் காணப்படும் ஆணின் கடமையுணர்வு இத்தகையது. இத்தகைய நல் அஃறிணைகள் தலைவனது ஊரில் உள்ளன. இதனைக் கண்டும் தலைவன் கடைமையுணர்ச்சி பெற்றானல்லன். ஆண் பன்றியானது தன் பெண் பன்றிக்கு உண்டான துன்பத்தை நீக்கிக் காத்து நின்றது என்பது, தலைவன் இற்செறிக்கப்பட்ட தலைவிக்கு ஏற்படும் துன்பத்தைப் போக்கிக் காக்க வேண்டும் என்பது இப்பாடலில் உள்ள உள்ளுறை பொருள்.

பன்றிச் சுட்டு தலைவனது உள்ளத்தைக் குத்துமன்றோ? ஆதலால் கருப்பொருளாகிய பன்றியின் மூலம் இச்செறிக்கப்பட்ட தலைவியைக் காத்தருளி அவளை விரைவில் மணந்து கொள்ள வேண்டும் என்ற வாழ்வியல் நெறியை தலைவனுக்குப் புலவர் உணர்த்துகிறார்.

குரங்கு:

கோழிலை வாழைக் கோள் முதிர் பெருங்குலை
ஊழுறு தீம் கனி, உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொடு, ஊழ் படு
பாறை நெடுஞ் சுனை, விளைந்த தேறல்
அறியாது உண்ட கடுவன் அயலது

கறி வளர் சாந்தம் ஏறல்செல்லாது,
நறு வீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்
குறியா இன்பம், எளிதின், நின் மலைப்
பல் வேறு விலங்கும், எய்தும் நாட!
குறித்த இன்பம் நினக்கு எவன் அரிய?

*வெறுத்த ஏஎர், வேய் புரை பணைத் தோள்,*
*நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு,*
*இவளும், இனையள் ஆயின், தந்தை*
*அருங் கடிக் காவலர் சோர் பதன் ஒற்றி,*
*கங்குல் வருதலும் உரியை; பைம் புதல்*

*வேங்கையும் ஒள் இணர் விரிந்தன;*
*நெடு வெண் திங்களும் ஊர் கொண்டன்றே.*

*( அகநானூறு. 2)*

*தலைவி இந்செறிக்கப்பட்டமையை உணர்த்தி அவளை விரைந்து மணந்து கொள்ளுமாறு தலைவனுக்குத் தோழி அறிவுறுத்தும் பாட்டு இது. குரங்கு தேனை அறியாதே உண்டு தன் தொழிலாகிய மரம் ஏறுதலும் செய்யாது வேறிடத்திற்குச் செல்லவுமாட்டாது அருகிருந்த சந்தன மரத்தின் நிழலில் மலர்ப்பரப்பில் உறங்கினாற்போல, நீயும் இக்களவொழுக்கமாகிய இன்பம் நுகர்ந்து நின் தொழிலாகிய அறஞ்செய்தலையும் விடுத்து, இக்களவினை நீக்கித் தலைவியை மணக்கவு மாட்டாது இக்களவொழுக்கமாகிய இன்பத்தில் ஊறித் திளைத்து மயங்கிக் கிடந்தாய் என்பது இப்பாடலின் பொருள்.*

*இப்பாடலில் குரங்கின் செயல்பாடுகளை தலைவனது செயல்பாடுகளுக்கு உவமையாகக் கூறி, இற்செறிக்கப்பட்ட தலைவியை விரைவில் மணம் முடித்துக் கொள்ள வேண்டும் என்ற வாழ்வியல் நெறியை கருப்பொருளான குரங்கின் மூலம் புலவர் வெளிப்படுத்துகிறார்.*

*முடிவுரை:*

*சங்கத் தமிழர் வாழ்வில் விலங்குகள் உணவுக்காகவும், வேட்டையாடுதலுக்காகவும், செல்லப் பிராணிகளாக வளர்ப்பதற்காகவும் மட்டுமல்லாமல், ஆறறிவு படைத்த மாந்தர்களுக்கு வாழ்வியல் நெறிகளை கற்பிக்கும் கருவிகளாகவும் இலக்கியங்களில் புலவர்களால் படைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து விலங்குகளுக்கும், மனித சமூகத்துக்கும் இடையே உள்ள ஒப்பற்ற உறவு நிலையை சங்கப் பாக்களின் வழி அறிய முடிகிறது.*

*இவ்வாய்வின் தொடர்ச்சியாகப் பின்வரும் தலைப்புகளில் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.*

1. *வாழ்வியற் கோட்பாடுகளும் – விலங்குகளும்*
2. *சங்க கால வாழ்க்கை முறையும் – விலங்குகளும்*
3. *சங்க இலக்கியங்களில் விலங்குகள் மூலம் வலியுறுத்தப்படும் வாழ்வியல் நெறிகள்.*

*துணை நின்ற நூல்கள்:*


1. *சாமி. பி.எல்., சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 2022.*
2. *செயபால் இரா. (உ.ஆ.) அகநானூறு (தொகுதி – 1, 2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., அம்பத்தூர், சென்னை, 2013.*
3. *திருஞானசம்பந்தம். ச, (பதி.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும்,*
   *கதிர் பதிப்பகம், திருவையாறு, 2018.*
4. *மாணிக்கம் வ.சு.ப., தமிழ்க்காதல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2002.*


*பன்னாட்டு தமிழ் இதழ்கள்:*


*சதீஷ்குமார். தெ. முனைவர்பட்ட ஆய்வாளர், உள்ளுறை உவமமும் இறைச்சிப் பொருளும், செம்மொழித் தமிழ் ஆய்விதழ் (பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காராண்டு ஆய்விதழ்), ராஜா பப்ளிகேஷன்ஸ், திருச்சிராப்பள்ளி, 2017.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********